செ.வெ.எண் : 638

# உயர்கல்வித் துறை அறிக்கை

## 28–7–2010

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் அவர்களின் பதவிக் காலத்தை கடந்த 9 ஆண்டுகளாக பணி நீட்டிப்பு செய்திருப்பதை எதிர்த்தும் மற்றும் சில கோரிக்கைகளை வலியுறுத்தியும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஓய்வூதியதாரர்கள் சங்கம் உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைக் குழுவினர், இன்று (28–7–2010) உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்களையும், உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களை யும் சந்தித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி மனு ஒன்றினைக் கொடுத்துள்ளார்கள்.

கூட்டு நடவடிக்கைக் குழுவினரின் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுடன் உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்கள் ஆலோசனை செய்துள்ளார்கள். அந்த ஆலோசனையின் அடிப்படையில், பல்கலைக் கழக நிர்வாகத்தினர் உடனடியாக போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிற கூட்டு நடவடிக்கைக் குழுவினரோடு, அவர்கள் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். பல்கலைக் கழக நிர்வாகத்தினர் தலையிட்டுப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார். இரு தரப்பிலும் பேச்சு வார்த்தை நடத்தி சுமூகமான முடிவு ஏற்படாவிடில் அரசு தலையிட நேரிடும் என்றும் அந்த அளவிற்கு வழி வகுக்காமல், சுமூகமான முறையில் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் உயர் கல்வித் துறையிடம் முதல்வர் அறிவுறுத்தியிருக்கிறார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9